
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1143

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

52

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.




ஓவியம் : சிகரன்

# சமத்துவத்தின் முகவரி திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்!

நெடுங்காட்டன்குடி, சூரனூர், சோழங்க நல்லூர், வடகுடி, எழுமுக்கால், கீழவைப்பூர், குரும்பேரி, தேராகுளம் உள்ளிட்ட 18 கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சி, திருவாதிரை மங்கலம். அதன் தலை கிராமம் திருவாதிரை மங்கலம்தான். 1950-க்கு முன்பு, ஊராட்சி முழுவதுமே ஆண்டான் - அடிமை, முதலாளி - தொழிலாளி, 'ஆதிக்கச்சாதி - ஒடுக்கப்பட்ட சாதி' என வர்க்கமும் வர்ணமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த சூழலே நிலவியது. பண்ணையார்கள் வீட்டிற்குள்கூட தாழ்த்தப் பட்டவர்கள் நுழைய முடியாது. உணவோ, தண்ணீரோ திண்ணையில் அமர்ந்துகூட உண்ண முடியாது. கொல்லைப்புறத்தில் வைத்து கொடுப்பார்கள். பள்ளி செல்லவும் தாழ்த்தப் பட்டோருக்கு அனுமதி கிடையாது.

இந்தச் சூழலில் 1950-களின் பிற்பகுதியில், நாகை மற்றும் திருவாரூரில் வீச்சாகப் பரவிய திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் திருவாதிரைமங்கலத்திலும் ஆழ வேரூன்றியது. உத்திராபதி, அந்தோணிசாமி, மாரியப்பா என திராவிடர் கழக முன்னோடிகள் பலர் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தைப் பலப்படுத்தி, பெரும்பகுதி மக்களை இயக்கமாக்கினர். ஆண்டுக்கு ஒரு முறையாவது பெரியாரை அழைத்துவந்து ஏதேனும் ஒரு குக்கிராமத்தில் கூட்டம் நடத்துவதை வழக்கமாக்கினர். பேருந்து வசதிகூட இல்லாத அக்காலத்தில், பெரும்பாலும் மாட்டுவண்டியிலேயே பெரியாரை அழைத்துவந்து அக்கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

பெரியாரும் அங்கு நிலவிய ஏற்றத்தாழ்வுகளைக் கடுமையாகச் சாடி பேசியிருக்கிறார். பண்ணையார்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பெரியாரின் பேச்சுகள் ஏற்படுத்திய தாக்கத்தால், பள்ளி செல்லும் வயதிலேயே நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பெரியார் தொண்டர்கள் ஆகினர். திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் குக்கிராமங்கள் வரை விரிவடைந்து வளர்ந்தது. பண்ணையார்கள் வீட்டுக்கு ஆடு, மாடு மேய்க்க செல்லக்கூடாது, அடிமை வேலைகளுக்குச் செல்லக் கூடாது எனத் தடுத்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம். சாணி அள்ளக்கூடாது, பறை அடிக்க செல்லக்கூடாது என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். அதனால், சங்கத்தில் இருப்போரை கூலியாட்களாக அழைப்பதையே தவிர்க்கத் தொடங்கினர் பண்ணையார்கள். ஆனாலும், மற்ற மக்களையும் திரட்டி அடிமைத்தனத்தில் இருந்து வெளியேறவும், கூலித்தொகையைப் பங்காக உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டு போராட்டத்தை வலுப்படுத்தியது. தொடர் நெருக்கடிகளால், பேச்சுவார்த்தைகளால் பண்ணையார்கள் பணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆதிக்கம் தவிடுபொடியானது.

விவசாய சங்கம் வலுப்பெற்ற காலத்திலேயே திருவாதிரைமங்கலத்தில் படிப்பகம் ஒன்றை உருவாக்கினர். வீட்டுக்கு வீடு வானொலிகூட இல்லாத அந்தக் காலத்திலேயே படிப்பகத்தில் வானொலி வாங்கி வைத்து தினமும் மக்கள் செய்திகளை அறிந்து கொள்ள வழிவகை செய்தனர். எல்லோருக்கும் படிக்கத் தெரியாத காலம் என்பதால், 'விடுதலை' பத்திரிகையை ஒருவர் வாசிக்க, பலர் கூட்டமாக அமர்ந்து செய்திகளைக் கேட்டுக்கொள்வார்கள். கல்வியறிவு பெறுவதற்கு முன்பே சமூக அறிவை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை 'வானொலி'யும் 'விடுதலை' நாளிதழும் ஏற்படுத்தின. பின்னர், சோழங்கநல்லூர் கிராமத்தில் பெரியார் மருத்துவமனை கட்டப்பட்டது.

அரசிடம் பேசிப்பேசி திருவாதிரைமங்கலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகளை ஏற்படுத்தினர். நியாய விலைக்கடைகளைப் பெற்றுக்கொடுத்தனர். இயக்கப் பணிகளோடு நின்றுவிடாமல் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்தித் தருவதிலும் முன்நின்றனர். திருவாதிரைமங்கலத்தில் திராவிட இயக்கத்தின் இருப்பை உறுதி செய்வதற்கான ஆதாரமாக அந்தப் படிப்பகமும் மருத்துவமனையும், கல்விக் கூடங்களும் இன்றும் இயங்கிக்கொண்டே இருக்கின்றன.

...பயணம் தொடரும்

## ஓரவஞ்சனையே ஒன்றியத்தின் நிர்வாகத் திறன்!

பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களின் வளர்ச்சிக்கு என ஒன்றிய அரசு, அதிக நிதியை ஒதுக்குவதையும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களைப் புறக்கணிப்பதையும் எதிர்த்து, தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வருகிறது தமிழ்நாடு. வளர்ச்சிக்குப் பங்காற்றும் மாநிலங்களைப் புறக்கணித்து, பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்குகிறோம் என்று கூறினாலும், அந்த நிதி எந்தத் திட்டமிடலும் இல்லாமல் வீணடிக்கப்பட்டு வருவதை, ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே சொல்கின்றன. அதற்கு ஓர் உதாரணமாக, உத்தரப்பிரதேச மாநிலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடங்கப்பட்ட விமான நிலையங்களே சாட்சியாக உள்ளன.

2021-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை 'உதான்' திட்டத்தின்கீழ், உத்தரப்பிரதேச மாநிலத்தில் கட்டப்பட்ட 7 விமான நிலையங்களில் 6 விமான நிலையங்கள், விமான போக்குவரத்தே இல்லாமல் மூடப்பட்டுள்ளன என இந்திய விமான நிலைய ஆணையரகம் தெரிவித்துள்ளது.

அசம்கார், அலிகார், சித்திரகூட், ஷ்ராவஸ்தி, குஷிநகர் மற்றும் மொராதாபாத் விமான நிலையங்கள் தொடங்கப்பட்ட சில மாதங்களிலேயே நிறுத்தப்பட்டுவிட்டன. அசம்கார், சித்திரகூட் விமான நிலையங்கள், 8 முதல் 9 மாதங்களே செயல்பட்டுள்ளன. மொராதாபாத் விமான நிலையம் 3 மாதங்கள் மட்டுமே செயல்பட்டுள்ளது.

குறைவான பயணிகள் எண்ணிக்கை, தொழில்நுட்பக் கோளாறுகள், குறைந்த காட்சித்திறன், அதிகப்படியான செயல்பாட்டுச் செலவு மற்றும் விமான நிறுவனங்களின் போதிய ஆர்வமின்மை போன்ற காரணங்களால் இந்த விமான நிலையங்கள் செயல்பாடுகளை நிறுத்தியுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் நகரமான ஓசூரில் விமான நிலையம் அமைப்பதற்கு, தமிழ்நாடு அரசு அனுமதி கோரிய நிலையில், அருகில் பெங்களூரு விமானநிலையம் இருப்பதைக் காரணம் காட்டி நிராகரித்துள்ளது ஒன்றிய அரசு. ஆனால், அந்த விதிமுறைகளை மீறி உத்தரப்பிரதேசத்துக்கு அனுமதி அளித்துள்ளனர். இப்படி, வளரும் மாநிலத்தின் தேவைகளைப் புறக்கணித்து, நிதியைத் திருப்பி விட்டதுடன், அந்த நிதியும் விழலுக்கு இறைத்த நீரானது அம்பலமாகியுள்ளது. எந்த ஒழுங்குமுறையும் இல்லாத இந்த ஓரவஞ்சனைதான் ஒன்றிய அரசின் நிர்வாகத் திறன்.

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்த்திய தளபதி!



து.ஜெயக்குமார்

என் தந்தை எஸ்.துரைக்கண்ணு அவர்கள், மயிலாப்பூர் சலவைத் துறையின் தலைவராக இருந்தவர். காவிரி நீர் உரிமை மீட்புப் பயணமாக, கழக நிர்வாகிகளின் ஆதரவுடன் சென்னை முதல் மைசூர் வரை சைக்கிள் பிரச்சாரக் குழுவில் இடம்பெற்று, முத்தமிழறிஞர் அவர்களிடம் பாராட்டும் பரிசும் பெற்றவர். 2001-ஆம் ஆண்டுவாக்கில், தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியொன்றில் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளராக இருந்த தளபதி அவர்களை சந்தித்து, சலவைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தொழிலாளர்களைத் திரட்டிவந்து ஆதரவு தெரிவித்தார் என் தந்தை. அப்போது, நானும் உடனிருந்தேன். தலைவர் அவர்கள், கழகத்தில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றுங்கள் என வாழ்த்தி, ஊக்கப்படுத்தினார்.

– து.ஜெயக்குமார்,
மயிலாப்பூர் சலவையாளர் சங்கம்,
மயிலாப்பூர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

102

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு புள்ளிவிவரங்கள் சொல்லும் உண்மை!

**தி.மு.க. ஆட்சியில் பாலியல் வன்முறைகளும் போதைப் பழக்கமும் அதிகரித்திருப்பதாகக் குற்றம் சாட்டி பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் தங்கள் கூட்டணிக் கட்சிகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனவே?**

நாட்டு மக்கள் அடுப்பெரிக்க முடியாமல் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையும், மக்கள் நலனில் அக்கறையில்லாத போக்கும்தான் இதற்குக் காரணம் என்பதை சுட்டிக்காட்டி, தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, மார்ச் 15 அன்று தமிழ்நாடு தழுவிய மக்கள்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதற்குப் போட்டியாக, பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி, தி.மு.க. அரசுக்கு எதிராகத் தேர்தல் அறிவிப்பு வந்த பிறகு, போராட்டம் நடத்தி, 'நாங்களும் இருக்கிறோம்... மறந்திடாதீங்க' என்று மக்களிடம் காட்ட முயன்றுள்ளது.

பாலியல் வன்முறைகளைக் கண்டித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நடத்திய ஆர்ப்பாட்டத்தில், அவர் அருகில் நின்றவர் முன்னாள் அமைச்சரான 'மெயின் ரோடு ஆடியோ'




புகழ் ஜெயக்குமார். தவிர, விழுப்புரத்தில் மேடையேறிய அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் சி.வி.சண்முகத்தின் அருவருப்பான பேச்சை, அவர்களின் கூட்டணியில் உள்ள குஷ்புவே காறி உமிழ்ந்துள்ளார். இவர்கள்தான் பெண்கள் பாதுகாப்பு பற்றிப் பேசுகின்றனர்.

இந்தியாவில் பாதுகாப்பாக உள்ள முதல் 10 நகரங்களின் பட்டியலில் தமிழ்நாட்டின் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பெண்கள் அதிகம் பணியாற்றும் நிறுவனங்களைக் கொண்ட நகரங்கள் இடம்பெற்றுள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் 2012-ஆம் ஆண்டு நடந்த பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை 737. 2025-இல் தி.மு.க. ஆட்சியில் 401ஆகக் குறைந்துள்ளது. பெண்களை மானபங்கப் படுத்துவது தொடர்பான வழக்குகள் அ.தி.மு.க. (2012)ஆட்சிக்காலத்தில் 382. தி.மு.க. ஆட்சியில் (2025) எண்ணிக்கை 220. கொலை, கொலை முயற்சி, ஆதாயத்திற்கான கொலை உள்ளிட்ட அனைத்து குற்றங்களும் அ.தி.மு.க. ஆட்சியைவிட தி.மு.க. ஆட்சியில் குறைவுதான் என்பதை தேசிய குற்ற ஆவணப் பதிவு உறுதிப்படுத்துகிறது.

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி, கோவையில் படித்த மாணவி உள்ளிட்டோருக்கு ஏற்பட்ட பாலியல் கொடூரம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாரபட்சமின்றி விசாரணையை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கச் செய்துள்ளது திராவிட மாடல் அரசு. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் மாணவி கொலை விவகாரத்திலும் தனிப்படைகள் அமைத்து, உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

தமிழ்நாட்டிற்கு நேர்மாறாக, மணிப்பூரில் வெட்டவெளியில் பொதுமக்கள் முன்னிலையில் உடைகள் களையப்பட்டு, பாலியல் கொடுமைக்குள்ளான இரண்டு பெண்களுக்கு மூன்றாண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை. உத்தரப்பிரதேச மாநிலம் உன்னாவ் சிறுமியைச் சீரழித்த பா.ஜ.க. நிர்வாகி, மல்யுத்த வீராங்கனைகளிடம் பாலியல் சீண்டல் செய்த பா.ஜ.க. எம்.பி உள்பட பல பாலியல் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் கூடாரமாக உள்ள பா.ஜ.க.வுடன் சேர்ந்து அ.தி.மு.க.வும் கூட்டணிக் கட்சிகளும் ஆர்ப்பாட்டம் என்று கூவுவது, சாத்தான் வேதம் ஓதியது போலத்தான்.

...வினா தொடரும்.

## நம் வரலாறு

### நான்காவது ஆட்சி சூளுரை!

1996-ஆம் ஆண்டு, ஜனவரி 26, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் கழகத்தின் எட்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது. முதல் நாள் மாலையில், 25 லட்சம் பேர் கலந்துகொண்ட மாபெரும் பேரணி நடைபெற்றது. ஓரிடத்தில் அந்தப் பேரணி கடந்து செல்வதற்கு 14 மணி நேரம் ஆனது. மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றிய பேராசிரியர், 'கழகம் நான்காவது முறையாக ஆட்சி அமைக்கும்' என சூளுரைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131